40—

மாணவர் விடுதி

***14656—திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கம்பம் தொகுதி, உத்தமபாளையம் வட்டத்தில் உள்ள மேலசிந்தலைச்சேரியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நல்லாட்சி செய்து கொண்டிருக்கிற தமிழ்நாட்டின் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பம் தொகுதி, உத்தமபாளையம் வட்டத்தில் உள்ள மேலசிந்தலைச்சேரியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன் அவர்கள்.*

திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மக்களால் நான், மக்களுக்காகவே நான்" என்று வாழ்ந்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். கொடுத்து, கொடுத்துச் சிவந்த கரங்களுக்குச் சொந்தக்காரராக வாழ்ந்த பொன்மனச் செம்மல் இதய தெய்வம் எம்.ஜி.ஆர். அவர்களையும் வணங்குகிறேன். இன்றையதினம் வாய்ப்பு வழங்கிய தங்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2018 ஜனவரி 12]

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சி தலைவி அம்மா அவர்கள் வழியில் நல்லாட்சி நடத்தி கொண்டிருக்கிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், இங்கே வந்திருக்கிற அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கும், உலகமெல்லாம் இருக்கிற தமிழ் மக்களுக்கும், தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–30

கம்பம் தொகுதி, மேலசிந்தலைச்சேரி கிராமத்திலே பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி ஒன்றை அமைக்க வேண்டுமென்று நான் கேட்டிருந்தேன். அங்கே மேல்நிலைப் பள்ளி இருக்கின்றது. அந்தக் கிராமத்தைச் சுற்றி பல கிராமங்கள் இருக்கின்றன. குறிப்பாக, தோட்டத் தொழிலாளர்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதி. அந்தப் பகுதியிலே இருக்கின்ற ஏழை மாணவர்கள் பயனடைகின்ற வகையிலே அங்கே பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைத்துத் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டத்தில் 30 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இவ்விடுதிகளில் ஒப்பளிக்கப்பட்ட மாணவ–மாணவியர்களின் எண்ணிக்கை 1,980 ஆகும். தேனி மாவட்டம், கம்பம் தொகுதியில் 5 பள்ளி விடுதிகள் இயங்கி வருகின்றன. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ள மேலசிந்தலைச்சேரியில் செயல்பட்டு வரும் அரசு உயர்நிலைப் பள்ளியில் மொத்தம் 165 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். மாநிலம் முழுவதும் பெருவாரியான கிராமங்கள் மற்றும் நகரங்களில் மாணவ–மாணவியர்கள் கல்வி கற்கத் தேவையான உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளின்மூலம் தடையின்றி கல்வி பயில கட்டணமில்லா பேருந்துப் பயண அட்டை, விலையில்லா மிதிவண்டி போன்ற வசதிகள் மாணவ–மாணவிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.*

மேலும், இத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் 1,338 விடுதிகளில் 1,112 விடுதிகள் பள்ளி விடுதிகளாகும். இந்தச் சூழ்நிலையில் கம்பம் தொகுதி, உத்தமபாளையம் ஒன்றியம், மேலசிந்தலைச்சேரியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி ஒன்றைப் புதிதாக அமைக்க அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

திரு. ரா. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்ட வேப்பந்தட்டையில் அமைந்திருக்கிற அரசு கலை அறிவியல் கல்லூரியில் 1,145 ஏழை மாணவர்கள் உயர் கல்வி பயின்று வருகின்றனர். தொலைதூரத்திலிருந்து கல்லூரியில் கல்வி பயிலும் அந்த ஏழை பிற்படுத்தப்பட்ட மாணவர்களுடைய நலனைக் கருத்தில் கொண்டு கல்லூரி விடுதியில் தங்கி கல்வி பயிலுவதற்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் கல்லூரி விடுதி ஒன்றினை அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று தேவையின் அடிப்படையிலும், நிதிநிலைக்கேற்பவும் புதிய விடுதி திறக்க ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]